212—

சாலையை அகலப்படுத்துதல்

***12636—திரு. பெ. ராமலிங்கம்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் முதல் பரமத்தி–வேலூர் வரை செல்லும் சாலையில் சந்தைப்பேட்டை புதூர் முதல் காவெட்டிப்பட்டி வரையுள்ள சாலையை அகலப்படுத்தி மேம்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

நாமக்கல் நகரிலிருந்து காவெட்டிப்பட்டி வழியாக, பரமத்தி–வேலூர் 20 கிலோ மீட்டர் தூரம். இதில் நாமக்கல், சந்தைப்பேட்டை புதூரிலிருந்து காவெட்டிப்பட்டி வழியாக வள்ளிபுரம் வரை 5 கிலோ மீட்டர் தூரம். இந்த 5 கிலோ மீட்டர் தூரமும் கைவிடப்பட்ட தேசிய நெடுஞ்சாலையில் இருவழித் தடமாக இருந்தது. இதை 2021–2022 ஆம் நிதியாண்டில், நான்கு வழித் தடமாக CRIDP *மூலமாக, 25.45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அகலப்படுத்தி, மேம்பாடு செய்ய ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டு, இப்போது பணி துவங்கும் நிலையில் உள்ளது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. ராமலிங்கம் அவர்கள்.*

திரு. பெ. ராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணி இப்போது தொடங்கப்படும் என்று அறிவித்திருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்தில் நாமக்கல் சட்டமன்றத் தொகுதி மக்கள் சார்பாக எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

நாமக்கல் சட்டமன்றத் தொகுதி, புதுச்சத்திரம் ஒன்றியம், களங்காணி முதல் திருமலப்பட்டிக்குச் செல்லும் ODR *சாலை 10.4 கிலோ மீட்டர் நீளம் கொண்டது. அந்தச் சாலை, சேலம்–கரூர் நெடுஞ்சாலையிலிருந்து சேந்தமங்கலம்–ராசிபுரம் நெடுஞ்சாலையை இணைக்கின்ற சாலை. இந்தச் சாலை*

2022 மே 4]

வழியாகத்தான் கொல்லிமலை செல்கின்றவர்கள் அதிகமாக வாகனங்களில் செல்கின்ற சாலை. எனவே, இந்தச் சாலையை இடைவழிச் சாலையிலிருந்து இருவழி சாலையாக மாற்றிக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நாமக்கல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட புதன்சந்தையிலிருந்து முசிறி செல்லும் சாலை 8 கிலோ மீட்டர் நீளம் கொண்டது. அந்தச் சாலையும் இரண்டு நெடுஞ்சாலைகளை இணைக்கின்ற சாலை. எனவே, இந்த இரண்டு சாலைகளையும் அகலப்படுத்தி, மேம்படுத்திக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, களங்காணி முதல் திருமலப்பட்டிக்குச் செல்லும் சாலையானது சேந்தமங்கலம் உட்கோட்டத்திற்குட்பட்ட மாவட்ட இதரச் சாலையாகும். இந்தச் சாலையினுடைய தூரம் 10 கிலோ மீட்டராகும். இந்தச் சாலையில் 8,438 போக்குவரத்துச் செறிவு இருக்கிறது. முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2022–2023 ஆம் ஆண்டில் இடைவழிச் சாலையிலிருந்து இருவழித் தடமாக அகலப்படுத்தி மேம்பாடு செய்வதற்கு அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. ராமலிங்கம் அவர்கள்.

திரு. பெ. ராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல், நாமக்கல் சட்டமன்றத் தொகுதி, மோகனூர் ஒன்றியத்திற்குட்பட்ட பரளி–அணியாபுரம் சாலை, இரண்டு நெடுஞ்சாலைகளை இணைக்கின்ற சாலை. அணியாபுரத்திலிருந்து புதுப்பாளையம் செல்கின்ற சாலை 8 கிலோ மீட்டம் நீளம் கொண்டது. அதுவும் ODR சாலை. அந்தச் சாலையையும் அகலப்படுத்தி, மேம்படுத்தித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று தங்கள்

வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவன்போடு கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10—10

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணியாபுரம், புதுப்பாளையம் சாலை என்பது நாமக்கல் உட்கோட்டத்திற்குட்பட்ட மாவட்ட இதர சாலையாகும். பரளி, அணியாபுரம், புதுப்பாளையம் சாலையினுடைய தூரம் 6 கிலோ மீட்டராகும். இச்சாலையானது 2018–2019 ஆம் நிதியாண்டில் புதுப்பிக்கப்பட்டு, 5 ஆண்டுகள் நிறைவடையவில்லை. இச்சாலை 2024–2025 ஆம் நிதியாண்டில் முன்னுரிமை அளித்து எடுத்துக்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 213, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

213—

கிராம நிருவாக அலுவலகம்

***4058—திரு. ச. சிவகுமார்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், களையூர் மற்றும் நாட்டார்மங்கலம் ஆகிய இரண்டு கிராமங்களுக்கும் பொதுவாக கிராம நிருவாக அலுவலர் அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,